சுற்று நிருப கடித இலக்கம்: 02/2014

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபக் கடிதம்/2014
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
17 -09-2014.

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களிற்கு.

**பிரதேச செயலகங்களின் ஓய்வூதிய வழங்கல்களை இலகுபடுத்தும் பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துதல்.**

26-08-2014 ஆந் திகதி கொண்டு என்னால் வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம் 11/2014 இன் படி ஓய்வூதிய வழங்கல்களை மீளமைத்து வங்கி முறைமையின் ஊடாக வழங்குகையில் கீழ் காட்டப்படும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

1. கொடுப்பனவு உப அட்டவணைகளை அனுப்ப வேண்டாமெனப் பெற்றுத் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது சில பிரதேச செயலாளர்களினால் கொடுப்பனவு உப அட்டவணைகளை (Pay Outlet) வங்கிகளிடத்தே அனுப்பியிருத்தல்.
2. பிரதேச செயலகங்களில் பராமரித்துச் செல்லப்படும் தரவுத் தொகுதிகளில் காணப்படும் ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்கிலக்கம், பெயர் மற்றும் வங்கிகளில் உள்ள கணக்கிலக்கம் மற்றும் பெயர் என்பனவற்றிடையே வேறுபாடுகள் காணப்படல் மற்றும் வெற்றிடங்கள் காணப்படல்.
3. வங்கிக் கிளைக் குறியீடுகள் (Bank Codes) சரியாகக் குறிப்பிடப்படாமை.
4. தேறிய ஓய்வூதியத் தொகை மறைப் பெறுமானத்தினைக் கொள்ளுதல் மற்றும் 0 எனக் குறிப்பிடப்படல்.
5. மொத்த ஓய்வூதியத்தினை விட தேறிய ஓய்வூதியம் அதிகரித்துக் காணப்படல்.
6. தரவுத் தொகுதியில் ஓய்வூதியரது பெயர் குறிப்பிடப்படாது வெற்றிடம் காணப்படல்.
7. ஓய்வூதிய இலக்கத்திற்குப் பதிலாக 0 அல்லது பாவனையில் இல்லாத இலக்கங்கள் குறிப்பிடப்படல்.

2014 அக்டோபர் 07 ஆந் திகதி ஓய்வூதியத்தினை வழங்க வேண்டியுள்ளதனால் மேற் குறித்த குறைபாடுகள் பற்றிய விசேட கவனத்தினைச் செழுத்திப் பூரணப்படுத்தப்பட்ட சரியான தரவுத் தொகுதியினை செப்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் திணைக்களத்திடத்தே சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்:
01. செயலாளர், அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
02. செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.
03. கணக்காய்வாளர் நாயகம்.